II ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,
THIRUVALLUR AT POONAMALLEE

**O.S.No. 285 of 2020**

Deposition of witness for the Plaintiff/PW 1
solemnly by Thiru.K.Palanikumar, Assistant
in accordance with the provision of Act I for 1873 on 22.10.2025

| | | | |
|---|---|---|---|
| Name | : K.Ramamoorthi | Age | : |
| Father's / Husband's Name | : | Village | : |
| Taluk | : | Distict | : |

<u>அனைத்து பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

இந்த வழக்கில் நான் எனக்காக மட்டும் தான் சாட்சியம் அளிக்கிறேன். எனது தரப்பில் விசாரிக்க போகும் சாட்சிகளின் பட்டியலை இது வரை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் பூந்தமல்லியில் தான் வசிக்கிறேன் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆம். நான் பி.ஏ படித்துள்ளேன். எனக்கு தமிழ் நன்றாக தெரியும். ஆனால் ஆங்கிலத்தில் தான் கையொப்பம் போடுவேன். நான் அரசு பணியில் இருந்து ஓய்வு பெற்றுவிட்டேன். நான் வருமான வரி செலுத்துவது இல்லை. அந்த அளவு வருமானம் இல்லை. எனக்கு பான் அட்டை உள்ளது. இந்த வழக்கின் சங்கதிகளை நான் கூறியுள்ளதாக தான் வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வழக்கின் பிரதிவாதிகளை நன்கு தெரியும். 1ம் பிரதிவாதியின் கணவர் செல்வத்தையும் தெரியும். ராமலிங்கத்தை எனக்கு 20 ஆண்டுகளாக தெரியும். அவரது உறவினர் சோபனாவை எனக்கு தெரியாது. ஆனால் அவர் உறவினர் என்று தெரியும். செல்வம் ராமலிங்கத்திடம் கடனுறுதி சீட்டு எழுதிக்கொடுத்து பணம் வாங்கியிருந்தார். ராமலிங்கம் அவருடைய

அவசர தேவைக்காக என்னிடம் பணம் கேட்டார். நான் கடனுறுதி சீட்டின் அடிப்படையில் அவருக்கு கடன் கொடுத்தேன். 10.09.2020 ல் ராமலிங்கம், செல்வம் தன்னிடம் வாங்கிய கடனை எனக்கு Made Over செய்து கொடுத்தார். இந்த வழக்கை ராமலிங்கத்தின் மேற்பார்வையில் தான் நான் நடத்துகிறேன் என்றால் சரியல்ல. ஒவ்வொரு விசாரணை தேதியிலும் ராமலிங்கம் என்னுடன் நீதிமன்றத்திற்கு வருவார் என்றால் சரியல்ல. இன்று மட்டும் வந்துள்ளார். வா.சா.ஆ.5 வழக்கறிஞர் அறிவிப்பு எனது அறிவுறுத்தலின் பேரில் தான் அனுப்பப்பட்டது. அதில் வட்டியும் அசலும் கொடுத்து தான் வழக்கு கடனுறுதி சீட்டை ராமலிங்கத்திடம் இருந்து Made over செய்து வாங்கினேன் என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 ல் அசல் மற்றும் வட்டி எவ்வளவு என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். நான் உண்மையிலேயே அசல் மற்றும் வட்டி கொடுத்து கடனுறுதி சீட்டை வாங்கியிருந்தால் வா.சா.ஆ.5 லேயே அதனை பற்றி சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 முதல் 4 கடனுறுதி சீட்டுகளின் முன்பக்கம் மற்றும் பின் பக்கங்களை நான் தான் எழுதியுள்ளேன் என்றால் சரிதான். அவற்றை 10.09.2020 ல் எழுதியுள்ளேன் என்றால் சரிதான். (சாட்சி பிறகு Made Over செய்த கடனுறுதி சீட்டுகளை தான் 10.09.2020 ல் எழுதியதாக சொல்கிறார்). நான்கு கடனுறுதி சீட்டுகளை எழுதியபோதும் கண்ணனும், ராமலிங்கமும் உடன் இருந்தனர். வேறு யாரும் இல்லை என்றால் சரிதான். பொதுவாக நிறைய பக்கங்களில் கையொப்பமிட வேண்டியிருந்தால் கையொப்பமிடவேண்டிய இடங்களில் அடையாள குறியீடு இடுவார்கள் என்றால் சரிதான். கையொப்பமிடவேண்டிய நபர் நேரில் இருந்தால் அவ்வாறு அடையாள குறியீடு இடமாட்டார்கள் என்றால் சரிதான். நான்கு கடனுறுதி சீட்டுகளும் எந்த இடத்தில் வைத்து Made over செய்யப்பட்டது

என்று அதில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 முதல் 4 கடனுறுதி சீட்டுகளிலும் Made over செய்யப்பட்ட இடங்களில் அடையாள குறியீடு உள்ளது என்றால் சரிதான். நான் அடையாள குறியீட்டை குறித்து ரமலிங்கத்திற்கு வா.சா.ஆ.1 முதல் 4 யை அனுப்பி அவரது கையொப்பத்தை பெற்றேன் என்றால் சரிதான். ( பிறகு சாட்சி ராமலிங்கமும் நேரில் இருந்ததாக சொல்கிறார்). ராமலிங்கத்திற்கு வேலூர் மாவட்டம் அணைக்கட்டு என்ற ஊர் தான் சொந்த ஊர் ஆகும். 10.09.2020 தேதியில் கோரோனா பெருந்தொற்று அதிகமாக இருந்தது என்றால் எனக்கு தெரியாது. ஏப்ரல் 2020 – செப்டம்பர் 2020 வரை ஒரு மாவட்டத்தில் இருந்து மற்றொரு மாவட்டத்திற்கு போவதற்கு இ–பாஸ் வாங்கவேண்டும் என்றால் எனக்கு தெரியாது. Made over செய்யும் போது ராமலிங்கம் என்னுடன் இருந்திருந்தால் இ–பாஸ் வாங்கியிருக்கவேண்டும் என்றும் அவ்வாறு இ–பாஸ் வாங்கியதாக நான் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றும் வழக்குரையிலும் சொல்லவில்லை என்றாலும் சரியல்ல. (சாட்சி வழக்குரையில் அதனை சொல்லவில்லை என்று வழக்குரையை பார்வையிட்டுவிட்டு சொல்கிறார்).

(இந்நிலையில் இரு தரப்பு வழக்கறிஞர்களும் கேட்டுக்கொண்தற்கிணங்க குறுக்கு விசாரைணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது).